(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 424.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2014 நவெம்பர் 24, திங்கட்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2762/ '12

1.

கௌரவ சஜித் பிரேமதாச,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 யூன் மாதம் நடாத்தப்பட்ட ஆசிய கனிஷ்ட மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகளின் நிமித்தம் சுகததாச விளையாட்டரங்கை நவீனமயப்படுத்துவதற்கான ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட கம்பனி அதற்குத் தேவையான தகைமைகளை நிறைவு செய்திருந்ததா என்பதையும்;

(ii) மேற்படி கம்பனி ஓட்டப் பந்தயப்பாதையின் நவீனமயப்படுத்தலை உரிய தரத்துடனும் திருப்தியடையக்கூடிய விதத்திலும் மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி கம்பனி இதற்கு முன்னர் போகம்பர விளையாட்டரங்கில் மேற்கொண்ட நிர்மாணிப்புகள் உரிய தரத்தைக் கொண்டிருக்கவில்லை என விடுக்கப்பட்ட குற்றச்சாட்டுகளில் உண்மையேதும் உள்ளதா என்பதையும்;

(iv) சுகததாச விளையாட்டரங்கின் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளை அமைச்சின் உத்தியோகத்தர்கள் உரிய முறையில் மேற்பார்வை செய்தார்களா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3561/ '13

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளுக்கான, அமைச்சில் அல்லது அமைச்சின் கீழுள்ள வேறு ஏதேனும் நிறுவனத்தில்/ அலுவலகத்தில் துறைசார் நிபுணர், ஆலோசகர் அல்லது இவ்வகையான வேறு அதிகாரி எவரேனும் நியமிக்கப்பட்டனரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் எப்போதிலிருந்து நியமிக்கப்பட்டனர் என்பதையும்;

(iii) அவர்களின் நியமனங்களின் நோக்கத்தையும்;

(iv) ஒரு மாதத்திற்கு அவர்களுக்காக ஏற்படும் மொத்த செலவு ஆகியவற்றையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மேலே (அ) (i) இல் உள்ளவாறு 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரை ஏதேனும் நியமனம் வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) அவர்கள் இப்போதும் பணிபுரிகின்றார்களா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அவர்களை நியமிப்பதற்கு கருத்திற் கொள்ளப்பட்ட தொழில்சார் தகுதிகள் அல்லது வேறு தகவுதிறன்கள் யாவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4406/ '13

3\.

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடெங்கிலுமுள்ள கல்வியியற் கல்லூரிகளுக்கென அங்கீகரிக்கப்பட்ட கல்விசாரா பணியாட்டொகுதி எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போது மேற்படி பணியாட்டொகுதிகளில் மிகை அல்லது பற்றாக்குறை காணப்படுகிறதா என்பதையும்;

(iii) மேற்படி கல்விசாரா பணியாட்டொகுதியில் ஒவ்வொரு பதவிக்குமுரிய சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4426/ '13

4\.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— மீள்குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013 ஆம் ஆண்டின் ஓகத்து மாதமளவில் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் மீள் குடியேற்றப்பட்ட,

(i) குடும்பங்களின் எண்ணிக்கை;

(ii) மேற்படி குடும்பங்களுக்குரிய உறுப்பினர்களின் தொகை;

(iii) இவர்கள் மத்தியில் உள்ள பெண்களின் எண்ணிக்கை;

(iv) சிறுவர்களின் எண்ணிக்கை

எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேலே குறிப்பிட்டுள்ளவாறு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வீடுகளில் மலசலகூட வசதிகளை கொண்ட வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4624/ '13

5\.

கௌரவ சுஜீவ சேனசிங்ஹ,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாவனைக்குப் பொருத்தமற்ற எரிபொருளை இறக்குமதி செய்தமை தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்ட இரண்டு நிறுவனங்களுக்கு மீண்டும் எரிபொருள் இறக்குமதி செய்ய அனுமதியளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி இரண்டு நிறுவனங்களும் எந்த அடிப்படையில் தடை செய்யப்பட்டது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) விமானங்களுக்குப் பயன்படுத்துவதற்காக இறக்குமதி செய்யப்படுகின்ற எரிபொருள், மண்ணெண்ணெய்யாக பயன்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஒக்டேன் 95 ஆக இறக்குமதி செய்யப்படுகின்ற பெட்ரோல் ஒக்டேன் 90 ஆக தரம் குறைக்கப்பட்டு சந்தைக்கு விடுவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வாறு செய்ய வேண்டி ஏற்பட்ட பெட்ரோல் இருப்பை வழங்கிய சீனக் கம்பனிக்கு மீண்டும் மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளமைக்கான காரணம் யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள், எரிபொருளை இறக்குமதி செய்யும் போது முறைகேடுகளை மேற்கொண்டுள்ளதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிறுவனத்துக்கு எதிராக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5104/ '14

6.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்விச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) பாடசாலை மாணவர்களுக்காக 'சிசு சம்பத' எனும் பெயரில் காப்புறுதித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், தற்போது மேற்படி காப்புறுதித் திட்டத்திற்கான பங்களிப்பைப் பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) 2014 ஆம் ஆண்டில் மேற்படி காப்புறுதித் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள நலன்களின் முழுமொத்தப் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iv) 'சிசு சம்பத' காப்புறுதி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தொடர்பு கொண்டுள்ள காப்புறுதி நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5349/ '14

7.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) நாட்டினுள் பேணிவரப்படுகின்ற சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி நீர் மின் உற்பத்தி நிலையங்கள் உள்ள மாவட்டம், இடம், அதனுடன் தொடர்புடைய நீரோட்டம் மற்றும் அவற்றின் மூலம் தேசிய மின்வலு முறைமைக்கு பெற்றுக் கொடுக்கப்படுகின்ற மின்சாரக் கொள்ளளவு ஆகியன தனித்தனியே யாவை என்பதையும்

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்களில் அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படுகின்ற மின் உற்பத்தி நிலையங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை யாவை என்பதையும்;

(iii) தனியார் துறையின் சிறிய மின் உற்பத்தி நிலையங்களை ஆரம்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்படுகின்றபோது கடைப்பிடிக்கப்படுகின்ற செயல் நடைமுறை யாதென்பதையும்;

(iv) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதன் காரணமாக சூழலுக்கு ஏற்படுகின்ற தாக்கம் பற்றி பின்னாய்வு செய்யப்படுகின்றதா என்பதையும்;

(v) ஆமெனில், அது எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5639/ '14

8.

கௌரவ (திருமதி) தலதா அத்துகோரல,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதியன்று மாத்தறையில் நடாத்தப்பட்ட இராணுவ வீரர்களை பாராட்டும் தேசிய விழாவுக்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத் தொகை யாதென்பதையும்;

(ii) யுத்தத்தின் காரணமாக முழுமையான மற்றும் பகுதி அளவிலான ஊனமுற்ற நிலைக்கு உள்ளாகிய இராணுவ வீரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) ஊனமுற்ற இராணுவ வீரர்களுக்காக வீடமைப்புத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டு இராணுவ வீரர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) வீடுகளை வழங்குவதற்கு மேலதிகமாக, ஊனமுற்ற இராணுவ வீரர்களுக்காக வேறு நலன்புரிப் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— 2010.07.09 மற்றும் 2014.10.31 ஆகிய தினங்களில் பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளால் தடைபெறாமல், ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 தொடக்கம் 14 ஆம் இலக்கங்கள் வரையான பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 7, 70(2) மற்றும் 70(3) ஆம் இலக்க நிலையியற் கட்டளைகளின் ஏற்பாடுகளிலிருந்தும் விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2014, திசெம்பர் மாதம் 12 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2015) — (ஒதுக்கப்பட்ட இருபத்தி நான்காவது நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, நவெம்பர் 21).

* 2.

ஒதுக்கீடு (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, நவெம்பர் 21) [1].

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் அமைச்சரால் உற்பத்தி வரி தொடர்பில் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 24 ஆம் திகதிய 1885/42 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 2011 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் இறுதியாக திருத்தப்பட்ட, 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 இ ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் அமைச்சரால் உற்பத்தி வரி தொடர்பில் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 24 ஆம் திகதிய 1885/43 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

பிரதம அமைச்சரும் பௌத்தசாசன மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 24 ஆம் திகதிய 1885/44 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கங்கள் 968, 969, 970, 971 மற்றும் 972)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கட்டளை,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியால் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பாக ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 24 ஆம் திகதிய 1885/47 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்தசாசன மத அலுவல்கள் அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான இறக்குமதித் தீர்வைகள் சம்பந்தமான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2014 ஒற்றோபர் 24 ஆந் திகதிய 1885/48 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் பந்தி (2) இன் உடனும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும், 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 24 ஆம் திகதிய 1885/50 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கட்டளை,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியால் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பாக ஆக்கப்பட்டு, 2014 ஓகத்து 11 ஆம் திகதிய 1875/17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழான செஸ் வரி தொடர்பில் கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சரால் நிதி, திட்டமிடல் அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் மாதம் 24 ஆம் திகதிய1885/45 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழான செஸ் வரி தொடர்பில் கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சரால் நிதி, திட்டமிடல் அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் மாதம் 24 ஆம் திகதிய 1885/46 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தி மற்றும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சட்டத்தினாலும், 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவுடனும் அந்தச் சட்டத்தின் 6 ஆம் பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய 1882/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2014.11.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தி மற்றும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சட்டத்தினாலும், 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2014 ஒற்றோபர் 02 ஆம் திகதிய 1882/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2014.11.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தி மற்றும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சட்டத்தினாலும், 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2014 ஒற்றோபர் 10 ஆம் திகதிய 1883/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2014.11.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கட்டளை,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியால் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பாக ஆக்கப்பட்டு, 2014 ஓகத்து 14 ஆம் திகதிய 1875/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 16.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கட்டளை,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியால் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பாக ஆக்கப்பட்டு, 2014 ஓகத்து 22 ஆம் திகதிய 1876/42 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 17.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கட்டளை,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியால் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பாக ஆக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 04 ஆந் திகதிய 1878/42 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 18.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 19.

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 20.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 21.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 22.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 23.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 24.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 25.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 26.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 27.

வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

28.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

29.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

30.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

31.

மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

32.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

33.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2015) எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் "தினப்பணிக்கான அனுபந்தம்" எனும் தனியிதழிற் பார்க்க.

[1] ''சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக'' எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.